1993 டிசம்பர் 30]

ஆண்டுகளுக்கு என்று வைத்துக்கொள்ளாமல், குறுகிய காலத்திலேயே வைத்து அதிகப்படியான நிதி ஒதுக்கீட்டைச் செய்து அந்த ஆதிதிராவிட சமுதாயத்தின் மக்களுக்காக பல்வேறு நிலைகளையும் சீர்படுத்திக் கொடுப்பதற்கு நல்ல நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

99—

அந்தியூர் தொகுதியில் புதிய மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை வழங்குதல்.

*20445—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் அந்தியூர் தொகுதியில் தொடர்ந்து பத்து ஆண்டுகளாக மீன் பிடிக்கும் உரிமையை பெற்றுள்ளவர்களை நீக்கி புதியவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டத்தில் அந்தியூர் பகுதியில் மீன் வளர்ப்போர்களாகச் செயல்பட்டு வரும் நபர்கள் எவருக்கும் பத்து ஆண்டுக்காலம் முடிவடையவில்லையாதலால் இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அந்தியூர் தொகுதியில் ஏராளமான ஏரிகள் இருக்கின்றன. அதாவது கெட்டி சமுத்திரம் ஏரி, பெரிய ஏரி, சந்திபாளையம் ஏரி, எண்ணமங்கலம் ஏரி, வேம்பட்டி ஏரி—இப்படி பல்வேறு வகையான ஏரிகள் இருக்கின்றன. இந்த ஏரிகளில் நீண்ட நெடுங்காலமாக தொடர்ந்து ஒரு சிலரே மீன்களைப் பிடித்து அவர்கள் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். மீனவர் சமுதாயத்தைச் சார்ந்த பலர் இந்த வசதிகளைப் பெற முடியாமல் மிகவும் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டு, வேறு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மீனவர்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் தமிழக அரசு மூலமாக ஏற்பாடு செய்து இருக்கிறார்கள், இதய தெய்வம், நான் வணங்கும் கடவுள் புரட்சித் தலைவி அவர்கள். அப்படிப்பட்ட அந்த சங்கங்களின் வாயிலாக இந்த மீனவர் சமுதாயத்தைச் சார்ந்த அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடிய சூழ்நிலையில் அந்த ஏரிகளில் மீனைப் பிடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதற்கு அமைச்சர் அவர்கள் உதவுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகமையின் கட்டுப்பாட்டில் வருகின்ற குளங்களைத் தான் முகமையின் மூலம் மீனவர்களுக்கு குத்தகை வழங்கப்படும். ஏரிகளிலே மீன் பிடிக்கின்ற உரிமைகள் பல துறைகளுக்கு இருப்பதன் காரணமாக, இந்த ஏரிகளை எல்லாம் அந்த மீன் வளர்ப்புக்கு உள்ளாக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய தமிழகத்தினுடைய இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு புதிய கொள்கையினை வடித்துத் தந்து இருக்கிறார்கள். அந்தக் கொள்கையின்படி ஏரிகளிலே மீன் வளர்ப்போர்க்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றியின் இருப்பிடமாய், வீரத்தின் பிறப்பிடமாய், அமைதிப் பூங்காவாய், அன்பின் திருவுருவாய், வள்ளலின் மறு பிறப்பாய், வந்துதித்த போர் வீரராய், புரட்சித் தலைவரின் போர் வாளாய், பகைவர்களைப் பதம் பார்க்கும் கூர்வாளாய், புரட்சியின் வடிவமாய், புதுமையின் வடிவமாய், தெவிட்டாத தெள்ளமுதாய், எங்களின் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி காலத்தில் மீனவர்கள் எங்கள் பகுதியிலே சிறப்பான முறையிலே இருந்தாலும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அவர்களுக்கு அந்த வாய்ப்பினை அளிக்காத காரணத்தினால், இன்றைக்கு ஒரு சிலரே பயன் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, விரைந்து அந்த கூட்டுறவுச் சங்கங்

1993 டிசம்பர் 30]

களின் மூலமாக அனைவரும் பயன் பெறக்கூடிய நிலையில், அந்த லாபத்தை எல்லோரும் ஈட்டக்கூடிய நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா? அவர்கள் பயன் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தருவார்களா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 100, திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

100—

கும்பகோணத்தில் 'ஹோட்டல் தமிழ்நாடு' கட்டுதல்.

* 10667—திரு. இராம. இராமநாதன் :
மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் வசதியாக தங்கிட குடந்தையில் 'ஹோட்டல் தமிழ்நாடு' (Hotel Tamil Nadu) கட்டும் பணியை துரிதப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வேலையை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற திருக்கோவில்களுக்கு எல்லாம் ஆண்டவன் அருள்பாலிப்பதைப் போல